REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) 4 PAGES பக்கம் 1

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION FILM - 22 DECEMBER 2025 CLICK - 09 ₹. 1

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு : CVPA நிர்வாகம்



# CVPA NNT நிதியில் இருந்து மறைந்த NNT பங்களிப்பாளர் திரு.கேதார் தவே குடும்பத்தினருக்கு ஒரு லட்சத்து 22,000 ரூபாய் வழங்கப்பட்டது.

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். 2025 ஆம் ஆண்டு நமது தொழில் துறையை சார்ந்த கலைஞர்களுக்கு, வியாபாரம் பெரியதாக சொல்லிக் கொள்ளும்படி மகிழ்ச்சியாக அமையவில்லை என்கிற பொதுக் கருத்து, பரவலாக இருந்து வருகிறது. இன்றைய தலைமுறையினர் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். காலம் காலமாக ஒரு குடும்பத்தில் ஒருவராக இருந்து, அந்த குடும்பத்தின் எல்லா நிகழ்ச்சி களையும் போட்டோ - வீடியோ எடுத்து வந்த காலமெல்லாம் மலையேரிப் போனது. இன்றைய இளம் ஜோடிகள் எடுக்கும் முடிவே அந்த குடும்பத்தின் இறுதியானது என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் திசை மாறி செல்லத் தொடங்கி விட்டனர்.திருமணங்களில் பாரம்பரியமாக எடுத்து வந்த புகைப்படக் கலையை "டிரடிஷனல்" என்கிற பெயர் வைத்து அதை ஓரம் கட்டும் வேலையை இன்றைய தலைமுறையினர் அதை சரியாகவே செய்து வருகின்றனர்.இது அனைவருக்கும் தெரிந்ததுதான். காலமாற்றம் படுவேகமாக கவர்ச்சியை நோக்கி நகர்ந்து வருகிறது. இன்றைய சூழ்நிலையில் திருமணம் எனும் வியாபார சந்தை மிகப் பெரிய அளவில் விரிவடைந்து விட்டது. இது பணம் படைத்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாகிக் கொண்டிருக்கும் அதே வேளையில், இன்ஸ்டாகிராமில் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வரும் மேரேஜ் ஈவண்ட் நிறுவனங்களும்திருமணம் சார்ந்த எல்லா தொழில்களையும் அவர்கள் வசம் மாற்றி வருகின்றனர். இதன் காரணமாக, புகைப்பட தொழில் மட்டுமின்றி பல்வேறு தொழில்கள் நசுக்கப்பட்டுள்ளன.நம்மில் அனுபவம் மிக்க பல கலைஞர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையை நாம் பல இடங்களில் நேரடியாக காண முடிகிறது. இது நம் புகைப்படத் தொழிலுக்கு மட்டும் இல்லை. திருமணம் சார்ந்த எல்லா தொழிலுக்குமே இதே நிலைதான் நீடித்து வருகிறது. எதிர் நீச்சல் போட்டு தொழிலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் எல்லோரும் இருக்கிறோம்.இந்த நிலை முற்றிலும் மாற வேண்டும் என்ற நம்பிக்கையோடு 2026 ஆம் ஆண்டில் நாம் எல்லோரும் புதிய அப்டேட்டுடன் களம் காண்போம். இப் புத்தாண்டில் நம்முடைய புகைப்படத் தொழிலை வெற்றி தொழிலாக மாற்றிக் காட்டுவோம். நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நமது தொழில்நுட்ப பயணத்தை மகிழ்ச்சியுடன் தொடர்வோம்.

மத்திய சென்னை புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த நமது CVPA உறுப்பினர் (CVPA ID NO : 904) திரு.சத்யவதனன் என்கிற ஜெய் அவர்கள் 20.12.2025 அன்று காலமானார். இதற்கு அடுத்த 21.12.2025 அன்று தென் சென்னை எஸ்-2, நங்கநல்லூர் பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுள் கால (CVPA ID NO:4343) உறுப்பினரும், நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் (CVPA NNT) பங்களிப்பு உறுப்பினராக இருந்தவருமான திரு.கேசவராம் அவர்கள் அடுத்தடுத்த நாளில் உயிரிழந்தது நமது சங்க உறுப்பினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருந்தது. நமது சங்கம் சார்பாக இந்த இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி இறந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்ச டங்கு தொகை தலா 20,000 ரூபாயை சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் மூலமாக வழங்கப்பட்டது.மேலும் CVPA NNT பங்களிப்பு உறுப்பினரான திரு.கேசவராம் அவர்களுக்கு சேர வேண்டிய CVPA NNT நிதி அவருடைய குடும்பத்தினருக்கு விரைவில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும்,01.11.2025 அன்று மரணம் அடைந்த மத்திய சென்னை, பார்க் டவுன் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினரும், CVPA NNTயின் பங்களிப்பு உறுப்பினருமான திரு.கேதார் தவே அவர்களின் வாரிசுதாரராக நியமிக்கப்பட்டு இருந்த அவரது மகன் திரு.நீல்கந்து தவே அவர்களிடம், CVPA NNT நிதியில் இருந்து ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்கான (1,22,000) காசோலையை 21.12.25 அன்று நமது CVPA சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் காசோலையை ஒப்படைத்தனர்.

அன்பு கலைச் சொந்தங்களே,இறந்தவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் CVPA NNT நிதி மூலமாக, ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் சங்கத்தால் பாதுகாக்கப்படுவது இப்போது உறுதி செய்யப் பட்டுள்ளது.இது CVPA NNT-யில் நீங்கள் உறுப்பினராக சேர்ந்து செய்த சிறு உதவி, நமது சக கலைஞனின் குடும்பத்திற்குபெரும் உதவியாய் அமைந்து வருகிறது. இது ஏதோ இறந்தவர்களுக்காக உதவி செய்யும் திட்டம் என்று யாரும் எண்ணி விட வேண்டாம். வருங்காலத்தில் இத்திட்டம் மிகப்பெரிய அளவில் விரிவு படுத்தப்பட உள்ளது என்பதை மட்டும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

இது வரை நம்மை விட்டு பிரிந்து சென்ற ஐந்து குடும்பங்களுக்கு

(1. திரு.சேகர் குடும்பம் -1,09,800,

2. திரு. கமலக்கண்ணன் குடும்பம்-1,13,400,

3. திரு.ராஜா ராமன் குடும்பம்-1,14,800,

4. திரு.ரமணிசந்திரன் குடும்பம்-1,21,600,

5. திரு.கேதார் தவே குடும்பம்-1,22,000,)

CVPA NNT நிதியில் இருந்து இதுவரை மொத்தமாக 5,81,600 ரூபாய் எடுத்து உதவி செய்திருக்கிறோம். அடுத்ததாக 6வது உறுப்பினரான திரு. கேசவராம் குடும்பத்திற்கும் எண்ணிக்கையின் அடிப்படையில் உதவி செய்ய இருக்கிறோம். CVPA NNTயில் பிறருக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் உள்ள உறுப்பினராக உள்ளவர்கள் தங்களுடைய பங்களிப்புத் தொகையை "0" பேலன்ஸ் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். என்று நாம் முன்பே அறிவித்திருந்தோம். இது தவிர ஒவ்வொரு உறுப்பினர் உயிரிழந்த போதும் உங்களது பங்களிப்பு தொகையை செலுத்துமாறு நினைவூட்டி வருகிறோம். ஆனாலும், பலர் தங்களுடைய பங்களிப்பு தொகையை செலுத்த தவறிவிடுகின்றனர்.நாம் ஆரம்பத்தில் செலுத்திய தொகையில் இருந்து முதல் 4 நபர்களுக்கான CVPA NNT நிதி முழுவதுமாக வழங்கப்பட்டு விட்டது.அவ்வப்போது தங்களது பங்களிப்பை செலுத்தாத உறுப்பினர்களின் கணக்கு தற்போது 'Oசு பேலன்ஸில் உள்ளது. இதே நிலையில் அந்த உறுப்பினர்கள் நீடிக்கும் பட்சத்தில் CVPA NNT விதிமுறைகள்படி சீனியாரிட்டி போவது டன், அவர்கள் மீண்டும் 90 நாட்களுக்குப் பிறகுதான் புதிய உறுப்பினராக சேர்க்கப்படும் நிலை உருவாகிவிடும்.எனவே "0" பேலன்ஸில் உள்ள CVPA NNT உறுப்பினர்கள் தங்களுடைய பங்களிப்புதொகையைஉடனடியாகசெலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் "0" பேலன்ஸை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

"0" பேலன்ஸில் உள்ள CVPA NNT உறுப்பினர்கள் தங்களுடைய கணக்கை உடனடியாக சரி பார்த்துக் கொள்ளவும். பங்களிப்பு தொகையை செலுத்த வரும் பொங்கல் பண்டிகை வரை கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள நமது சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.


23.12.2025 அன்று தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேஷனின் செயற்குழு கூட்டம் தஞ்சாவூரில் நடைபெற்றது. கூட்டத்தில் நமது சங்கம் சார்பாக மாநில சங்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

2026 ஆம் ஆண்டிற்கான டைரி, கேலண்டர் தயாரிக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. ஜனவரியின் இரண்டொரு வாரத்திற்குள் அனைவருக்கும் இது வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் ஆதரவோடு வரும் ஜனவரி 8,9,10 ஆகிய தேதிகளில் சென்னை திருவான்மியூர் ஆர்.கே கன்வர்சன் சென்டரில் பை-செல் நிறுவனம் சார்பில் நடைபெறும் போட்டோ வீடியோ கண்காட்சி க்கு நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
**P. துரைபாபு**
CVPA செயலாளர்





மத்திய சென்னை, பார்க் டவுன் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினரும், CVPA NNT யின் பங்களிப்பு உறுப்பினருமான சங்கர் போட்டோஸ் உரிமையாளர், **திரு.கேதார் தவே** அவர்கள் 01.11.25 அன்று காலை மரணம் அடைந்ததை தொடர்ந்து,நமக்கு நாமே திட்டத்தின் நிதியில் இருந்து அவருடைய வாரிசுதாரரான அவரது மகன் திரு.நீல்கந்து தவேவிடம் ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்கான (1,22,000) காசோலையை 21.12.25 அன்று நமது சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் காசோலையை ஒப்படைத்தனர்.

## ECR VISUAL STARS அணி CVPA 2025 கிரிக்கெட் கோப்பையை வென்றது!




கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் உள்ள நமது சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது.இந்த ஆண்டிற்கான கிரிக்கெட் போட்டி முதல் முறையாக நந்தனம் ஆர்ட்ஸ் காலேஜில் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் 1) ECR VISUAL STARS, 2) MYLAI KINGS, 3) GUHAN WARRIORS, 4) CVPA TIGERS, 5) NORTH CHENNAI, 6) FOUR STAR, 7) 5D BOYS, 8) CHANDRA VIDEO, 9) AYAN STRIKERS, 10) STUDIO 5. என, ஆக மொத்தம் 10 அணிகள் பங்கேற்று, CVPA 2025 ஆம் ஆண்டு கோப்பையை வெல்வதற்கு ஆர்வத்துடன் விளையாடினார்கள்.லீக் முறையில்,6 ஓவர் என்கிற அடிப்படையில் போட்டிகள் நடைபெற்றன.மொத்தம் மூன்று நாட்கள் போட்டிகள் நடைபெற்றன.இதில், ECR VISUAL STARS அணியும், CHANDRA VIDEOS அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று விளையாடின.இறுதியாக 2025 ஆம் ஆண்டிற்கான CVPA கிரிக்கெட் கோப்பையை ECR VISUAL STARS அணியே வென்றது. வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு தமிழக வெற்றி கழகத்தின் வர்த்தக பிரிவு தலைவர் திரு. கபீர் அவர்கள், வெற்றி கோப்பை மற்றும் ரொக்க பரிசை வழங்கினார். வின்னராக வந்த இந்த அணிக்கு வெற்றி கோப்பையுடன், 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது. ரன்னராக வந்த சந்திரா வீடியோஸ் அணிக்கு 10,000 ரூபாய் ரொக்க பரிசாக வழங்கப்பட்டது. மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை நமது சங்க நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் பலரும் கிரிக்கெட் போட்டியை காண வருகை தந்திருந்தனர்.
































CVPA 2025 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற ECR VISUAL STARS அணிக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தமிழக வெற்றிக் கழகத்தின் வர்த்தக பிரிவு தலைவர் திரு. கபீர் அவர்கள் கோப்பையை வழங்கிய தருணம்.



CVPA 2025 கிரிக்கெட் போட்டியில் ரன்னராக வந்த சந்திரா வீடியோஸ் அணிக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த தமிழக வெற்றிக் கழகத்தின் வர்த்தக பிரிவு தலைவர் திரு. கபீர் அவர்கள் ரன்னருக்கான கோப்பையை வழங்கிய தருணம்.



பைனல் போட்டியில் விளையாடிய சந்திரா வீடியோஸ் மற்றும் ECR VISUAL STARS அணியை சிறப்பு விருந்தினருக்கு அறிமுகப்படுத்தி, சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட தருணம்.



CVPA 2025 கிரிக்கெட் போட்டியின் முக்கிய ஸ்பான்சராக இருந்த CVPA செயற்குழு உறுப்பினரும், ஆயிரம் விளக்கு பகுதி செயலாளராக இருந்து வரும் சன் மூன் திரு. சண்முகம் அவர்களுக்கு, கிரிக்கெட் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த தமிழக வெற்றி கழகத்தின் வர்த்தக அணி தலைவர் திரு.கபீர் அவர்கள் நினைவு பரிசு வழங்கிய தருணம்.





CVPA 2025 கிரிக்கெட் போட்டிக்கு வெற்றி பெற்ற ECR VISUAL STARS அணிக்கு 15,000 ரூபாயும், ரன்னராக வந்த சந்திரா வீடியோஸ் அணிக்கு 10,000 ரூபாய் ரொக்க பரிசாக வழங்கி, கிரிக்கெட் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்து கிரிக்கெட் வீரர்களை ஊக்குவித்த தமிழக வெற்றி கழகத்தின் வர்த்தக அணி தலைவர் திரு.கபீர் அவர்களுக்கு CVPA நிர்வாகிகள் நினைவு பரிசு வழங்கிய தருணம்















மூன்று நாள் கிரிக்கெட் போட்டி தொடருக்காக அப்பல்லோ ஹாஸ்பிடல் சார்பாக மருத்துவக் குழுவினர் இலவச மருத்துவ சிகிச்சை அளித்த தருணம். அப்போலோ மருத்துவமனை நிறுவனத்திற்கு நமது சங்கம் சார்பாக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



CVPA Cricket Tournament மூன்று நாள் நடைபெற்ற பொழுது Apollo Hospitals நிர்வாகத்தினர் நமக்காக மெடிக்கல் கேம்ப் போட்டு கொடுத்தார்கள். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக அவருக்கு சால்வை, Sweet மற்றும் நினைவு பரிசையும் வழங்கி கௌரவித்த தருணம்.




## கண்ணீர் அஞ்சலி



மத்திய சென்னை, புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த, CVPA உறுப்பினர், JK ஸ்டில்ஸ் உரிமையாளர், **திரு.சத்தியவதனன்** (CVPA ID NO: 904) என்கின்ற **ஜெய்** அவர்கள் 20.12.2025 இன்று காலை மாரடைப்பின் காரணமாக மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட நமது சங்க நிர்வாகிகள் அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். பின்னர் நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி, இறந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20000 ரூபாயை அவருடைய குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.



தென் சென்னை எஸ்-2, மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த CVPA-ன் ஆயுட்கால உறுப்பினரும், நமக்கு நாமே திட்டத்தின் பங்களிப்பு உறுப்பினரும், நங்கநல்லூர் கேசவன் போட்டோஸ் உரிமையாளருமாகிய **திரு.கேசவராம்** (CVPA ID 4343) அவர்கள் 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மாரடைப்பால் மரணம் அடைந்தார். அன்னாரது மறைவுக்கு நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது. நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20 ஆயிரம் ரூபாய் அவருடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவர் நமக்கு நாமே திட்டத்தின் பங்களிப்பு உறுப்பினராகவும் இருந்து வந்ததால் CVPA NNT நிதி விரைவில் அவருடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மருத்துவ உதவி



மத்திய சென்னை, நுங்கம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினரும், நுங்கம்பாக்கம் பகுதியின் முன்னாள் பகுதி செயலாளருமாகிய, சூளைமேடு அன்னை டிஜிட்டல் ஸ்டுடியோவின் உரிமையாளருமான **திரு.P.மன்னையா** (CVPA ID.611 LM) அவர்கள் கடந்த வாரம் இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்தின் காரணமாக கைகளில் முறிவு ஏற்பட்ட காரணத்தினால் எந்த பணிக்கும் செல்லாமல் வீட்டில் மருத்துவ ஓய்வில் இருந்து வருகிறார். இவருக்கு நமது பொது குழுவின் தீர்மானப்படி, நமது சங்க உறுப்பினருக்கு வழங்கப்படும் மருத்துவ உதவி தொகை 5000 ரூபாய் அவருக்கு நிர்வாக குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.





நமது CVPA சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. செல்.செல்வம் அவர்களின் மகன், பாலகிருஷ்ணன் - மேகவள்ளி தம்பதியினரின் குழந்தை யாழினியின் முதலாவது பிறந்தநாள் விழாவில் நமது சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு குழந்தை யாழினியை வாழ்த்தினார்கள்.



நமது CVPA சங்கத்தின் சைதாப்பேட்டை பகுதி செயலாளர் சுரேஷ் அவர்களின் செல்லமகள் ஜானுஷாவின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நமது சங்க நிர்வாகிகள் பகுதி செயலாளர் மற்றும் முன்னாள் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தை வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



நமது CVPA சங்கத்தின் தென் சென்னை - எஸ்2 பகுதியின் இணைச் செயலாளர், திரு.ராதாகிருஷ்ணன்-கனகா இவர்களின் பேரன் மாஸ்டர். யுவான்தூயா வின் முதலாவது பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நமது CVPA சார்பில் சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், ஆகியோர் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த, நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர், கமலி டிஜிட்டல் ஸ்டுடியோ திரு. S. கலியபெருமாள் (CVPA ID NO:861) அவர்களுடைய மகளின் நிச்சயதார்த்தம் கடந்த 07.12.25 அன்று சிறப்பாக நடைபெற்றது.நமது சங்கம் சார்பாக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351